உங்கள் அபிமான
தின தமிழ்
செய்திகளை உடனுக்குடன் தெரிந்து கொள்ள
வாட்ஸாப்பில்
பின்தொடரவும்...

. 4 பக்கங்கள் . விலை ரூ. 5

தின தமிழ்

தினசரி காலை நாளிதழ்

தமிழாய்! தமிழனாய்!! தமிழ்மொழிக்காய்!!!

DHINA TAMIL
RNI No : TNTAM/2023/85936

வாசிப்பை சுவாசிப்போம்!
கைபேசியை தவிர்ப்போம்!
செய்தித்தாள்
வாசிப்பை வழக்கமாக்கிக் கொள்வோம்!

www.dhinatamil.com • மாற்றத்தின் ஆரம்பம் • dhinatamil

♦ பதிப்பு : நாகர்கோவில் ♦ 31.10.2026 ♦ மலர் 04 ♦இதழ்: 303 ♦ சனி ♦Edition : Nagercoil ♦31.10.2026 ♦ Vol : 04 ♦Issue : 303 ♦Page : 4 ♦Rs. 5/-

தேவரின் மனிதநேயக் கொள்கைகளைப் பின்பற்றுவோம்: முதல்வர் விஜய்!

சென்னை

சாதி, மத வேறுபாடுகளைக் கடந்து மனிதநேயத்தை மட்டுமே தனது வாழ்வின் அடிப்படையாகக் கொண்டு வாழ்ந்த பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் லட்சியப் பாதையில் தொடர்ந்து பயணிப்போம் என்று முதல்வர் விஜய் தெரிவித்துள்ளார்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் மற்றும் குருபூஜையை முன்னிட்டு முதல்வர் விஜய் வெளியிட்டுள்ள சமூக வலைதளப் பதிவில், தேவரின் நாட்டுப் பற்று, தியாகம் மற்றும் சமூகநீதிக்கான பங்களிப்புகளைப் போற்றி மரியாதை செலுத்தியுள்ளார்.

அந்தப் பதிவில் அவர் கூறியிருப்பதாவது:

தேசியத்தையும், தெய்வீகத்தையும் தனது இரு கண்களாகப் போற்றி வாழ்ந்த சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் பிறந்த நாள் மற்றும் குருபூஜை நாளில், அவரது நாட்டுப்பற்றையும், தியாகத்தையும், சமூக நீதிக்கான பங்களிப்பையும் போற்றி வணங்குகிறேன்.

வீரம் செறிந்த தனது பேச்சாற்றலால் நாட்டு மக்களிடையே சுதந்திரக்கனலை மூட்டியவர் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர். நாட்டின் விடுதலைக்காகத் தனது வாழ்நாளில் அர்ப்பணிப்புடன் செயல்பட்ட அவர், நேதாஜி சுபாஷ்சந்திரபோஸின் கொள்கைகளைத் தீவிரமாகப் பரப்பினார். மேலும், இந்திய தேசிய ராணுவத்திற்கு ஆதரவைத் திரட்டி, ஆங்கிலேயர் ஆட்சியிலிருந்து நாடு விடுதலை பெறுவதற்கான போராட்டத்தில் முக்கியப் பங்காற்றினார்.

அவரது வாழ்க்கை நாட்டுப்பற்று, தியாகம், துணிச்சல் மற்றும் கொள்கைப் பற்றுக்கு எடுத்துக்காட்டாக விளங்குகிறது.

தனது பேச்சாற்றல் மற்றும் செயல்பாடுகள் மூலம் மக்களிடையே தேசிய உணர்வை வளர்த்தவர். சமூகத்தில் ஒற்றுமையும் மனிதநேயமும் நிலவ வேண்டும் என்ற உயர்ந்த எண்ணத்துடன் வாழ்ந்தவர்.

சாதி, மத எல்லைகளைக் கடந்து மனிதநேயத்தையே தனது வாழ்வின் மூச்சாகக் கொண்டிருந்த அவரது கொள்கைகள் இன்றைய தலைமுறையினருக்கும் வழிகாட்டியாக உள்ளன. நாட்டின் மீதும், மக்களின் மீதும் கொண்டிருந்த அக்கறையும், சமூகநீதிக்காக அவர் ஆற்றிய பங்களிப்பும் என்றும் நினைவுகூரத்தக்கவை.

அவரது பிறந்த நாள் மற்றும் குருபூஜை நாளில், அவரது தியாகங்களை நினைவுகூர்வதுடன், அவர் வலியுறுத்திய உயரிய கொள்கைகளையும் நமது வாழ்வில் பின்பற்ற வேண்டியது அவசியம். மனிதநேயம், சமத்துவம், சமூக ஒற்றுமை ஆகியவற்றை முன்னிறுத்தி அனைவரும் ஒன்றிணைந்து செயல்பட வேண்டும்.

சாதி, மத வேறுபாடுகளுக்கு அப்பாற்பட்டு மனிதநேயத்தை முதன்மையாகக் கொண்ட பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் லட்சியப் பாதையில் தொடர்ந்து பயணிப்போம் என்று முதல்வர் விஜய் தனது பதிவில் தெரிவித்துள்ளார்.

பசும்பொன் தேவர் நினைவிடத்தில் உள்ள தேவர் சிலைக்கு அரசு சார்பில் அமைச்சர்கள் நிர்மல் குமார், மதன் ராஜா, ராஜீவ் உள்ளிட்டோர் மரியாதை செலுத்தினர்.

அங்கு நடைபெற்ற அரசு விழாவில் ரூ.79.70 லட்சம் மதிப்பில் பயனாளிகளுக்கு அரசு நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினர்.

ராமநாதபுரம் மாவட்டம், பசும்பொன்னில் முத்துராமலிங்கத் தேவரின் 119வது பிறந்தநாள் மற்றும் 64வது குருபூஜை விழாவை முன்னிட்டு அரசு சார்பில் எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் நிர்மல் குமார், குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில்நிறுவனங்கள் துறை அமைச்சர் பெ.மதன் ராஜா, சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் வி.கே. ராஜீவ், ஆட்சியர் மா. சிவகுரு பிரபாகரன் ஆகியோர் தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

இந்நிகழ்வில் எம்எல்ஏக்கள் தங்க பாண்டி, கோபிசன், கருப்பையா, குழந்தை ராணி நாச்சியார், இளங்கோ ஆகியோர் கலந்து கொண்டனர்.



பின்னர் செய்தியாளர்களிடம் அமைச்சர் நிர்மல் குமார் கூறியது:

"முத்துராமலிங்கத் தேவர் குரு பூஜை விழாவை முன்னிட்டு, பசும்பொன்னில் கடந்தாண்டைவிட இந்தாண்டு கூடுதல் ஏற்பாடுகள் செய்யப்பட்டுள்ளது. புதிதாக ஒரு சாலை அமைக்கப்பட்டுள்ளது. இதனால் குறுகிய நேரத்தில் சென்று முத்துராமலிங்கத் தேவரை தரிசித்து செல்ல முடியும்.

மேலும், இங்கு கூடுதல் குடிநீர் வசதி, கழிவறை வசதி உள்ளிட்ட அடிப்படை வசதிகள் செய்யப்பட்டுள்ளது என தெரிவித்தார்.

தமிழக முதல்வர் சென்னை நந்தனத்தில் உள்ள தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தியுள்ளார். முதல்வர் விரைவில் பசும்பொன் வருகை தருவார்" என தெரிவித்தார். அதனைத் தொடர்ந்து அங்குள்ள முத்துராமலிங்கத் தேவர் கலையரங்கத்தில் அரசு விழா நடைபெற்றது.

இதில் பல்வேறு அரசுத் துறைகளின் சார்பில் 194 பயனாளிகளுக்கு ரூ.79.70 லட்சம் மதிப்பில் நலத்திட்ட உதவிகளை அமைச்சர்கள் வழங்கினர்.

கோவை குறிச்சி பகுதியில் தேவர் சிலைக்கு அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை!



கோவை, அக்.31:

பசும்பொன் முத்துராமலிங்க தேவரின் 119ஆவது தேவர் ஜெயந்தியை முன்னிட்டு, கோவை சுந்தராபுரம் குறிச்சி பகுதியில் அமைந்துள்ள அவரது திருவுருவச் சிலைக்கு அதிமுகவினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

அதிமுக புறநகர் மத்திய மாவட்டச் செயலாளரும், முன்னாள் அமைச்சருமான செ.ம. வேலுசாமி தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில், முன்னாள் அமைச்சர் செ. தாமோதரன் மற்றும் கட்சி நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

அப்போது பேசிய நிர்வாகிகள், முன்னாள் முதல்வர் ஜெயலலிதா ஆட்சிக் காலத்தில் முத்துராமலிங்க தேவரின் நினைவு நிகழ்ச்சிகளுக்கு பல்வேறு உதவிகள் வழங்கப்பட்டதையும், நாட்டிற்காக அவர் செய்த தியாகங்கள் மற்றும் ஆன்மிகப் பணிகளுக்கு முக்கியத்துவம் அளித்து சிறப்பிக்கப்பட்டதையும் நினைவுகூர்ந்தனர்.

நிகழ்ச்சியில் ஒன்றியச் செயலாளர்கள் சிவசாமி, சக்திவேல், மாவட்ட விவசாய அணி செயலாளர் மகாலிங்கம், பகுதி செயலாளர் உதயகுமார் உள்ளிட்ட அதிமுக நிர்வாகிகள் பங்கேற்றனர்.

மேலும், தேவர் சமூக ஊர் மூக்குந்தர் சௌந்தரராஜன், தலைவர் தியாகராஜன், செயலாளர் கணேஷன், பொருளாளர் மகாலிங்கம் மற்றும் பசும்பொன் காவடி குழுவினர் கலந்து கொண்டனர். பசும்பொன் காவடி குழு சார்பில் காலை சிற்றுண்டியும், மயிலேரிப்பாளையம் ஊராட்சி மன்றத் தலைவர் திருமூர்த்தி சார்பில் மதிய உணவும் வழங்கப்பட்டது.

இதில் கமிட்டி உறுப்பினர்கள் மற்றும் பொதுமக்கள் ஏராளமானோர் பங்கேற்றனர்.



வேலூர் டான் போஸ்கோ பள்ளியில் அறிவியல் கண்காட்சி: மாணவர்களின் படைப்புகளைப் பாராட்டிய சட்டமன்ற உறுப்பினர்!

வேலூர்: வேலூர் அண்ணா சாலையில் உள்ள டான் போஸ்கோ உயர்நிலைப் பள்ளியில், டாக்டர் அப்துல் கலாம் அறிவியல் மன்றம் சார்பில் அறிவியல் கண்காட்சி நடைபெற்றது. தமிழ் தாய் வாழ்த்துடன் தொடங்கிய இந்நிகழ்ச்சியில், வேலூர் சட்டமன்ற உறுப்பினர் மு.ம. வினோத் கண்ணன், பழமை வாய்ந்த ஊரீஸ் கல்லூரி முதல்வர் டாக்டர் ஆனி கமலா பிளாரன்ஸ் ஆகியோர் சிறப்பு அழைப்பாளர்களாகக் கலந்து கொண்டு கண்காட்சியைத் தொடங்கி வைத்தனர். மேலும், மாணவர்களின் அறிவியல் படைப்புகளைப் பார்வையிட்டு சிறப்புரையாற்றினர். இவ்விழாவில் பள்ளியின் காலாளர் தந்தை டாக்டர் ஏ. ராய் லாசர், நிர்வாகத் தந்தை டி. ஜோசப் ஆகியோர் முன்னிலை வகித்தனர். பள்ளித் தலைமை ஆசிரியர் பெலவேந்திரம் வரவேற்புரை நிகழ்த்தினார். சிறப்பு விருந்தினர்களாக பள்ளி முதல்வர் அருட்சகோதரி ராணி, செயின்ட் மேரிஸ் மகளிர் மேல்நிலைப் பள்ளி முதல்வர் சில்வியா, டான் போஸ்கோ தொடக்கப்பள்ளி தலைமை ஆசிரியர் ஜே. விஜயா ஆகியோர் கலந்து கொண்டனர்.

அறிவியல் மன்றப் பொறுப்பாளர்கள் ஆசிரியர்கள் ஜெய பிரகாசம், பிரகாசம் உள்ளிட்ட ஆசிரியர்கள் மற்றும் மாணவர்கள் பங்கேற்று விழாவைச் சிறப்பித்தனர்.

தருமபுரி வனத்துறையினரால் கைப்பற்றப்பட்ட 44 உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கிகள் ஆட்சியர் முன்னிலையில் காவல்துறையினரிடம் ஒப்படைப்பு



தருமபுரி அக்.31

தருமபுரி மாவட்டத்தில் வனவிலங்குகள் சட்ட விரோதமாக வேட்டையாடப்படுவதை தடுக்கும் வகையில் தமிழ்நாடு முதன்மை தலைமை வனப் பாதுகாவலர் அறிவுறுத்தலின்படி உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கிகளை தாமாக முன்வந்து ஒப்படைக்க வேண்டும் என்று அறிவுறுத்தப்பட்டது. இந்த உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கிகளை ஒப்படைப்பது குறித்து தருமபுரி மாவட்டத்தில் உள்ள வனப்பகுதிகளை ஒட்டி உள்ள கிராமங்களில் வனத்துறையின் சார்பில் விழிப்புணர்வு ஏற்படுத்தப்பட்டது. இதன் தொடர்ச்சியாக தருமபுரி வன கோட்டத்திற்குட்பட்ட 8 வனசரகங்களிலும் விழிப்புணர்வு கூட்டங்கள் நடத்தப்பட்டு துண்டு பிரசுரங்கள் விநியோகிக்கப்பட்டன. இந்த நடவடிக்கையின் பயனாக பொதுமக்கள் தாமாக முன்வந்து நாட்டு துப்பாக்கிகளை ஒப்படைத்துள்ளனர். அதன்படி தருமபுரி வனசரகத்திற்குட்பட்ட பகுதியில் 11 நாட்டு துப்பாக்கிகள், பென்னாகரம் வனசரகத்திற்குட்பட்ட பகுதியில் 7 நாட்டு துப்பாக்கிகள், அரூர் வனசாகத்திற்குட்பட்ட பகுதிகளில் 6 நாட்டு துப்பாக்கிகள், கோட்டப்பட்டி வனசரகத்திற்குட்பட்ட பகுதியில் இரண்டு நாட்டு துப்பாக்கிகள், மொரப்பூர் வன சரகத்திற்குட்பட்ட பகுதியில் 6 நாட்டு துப்பாக்கிகள், தீர்த்தமலை வனசரகத்திற்குட்பட்ட பகுதியில் 12 நாட்டு துப்பாக்கிகள் என மொத்தம் 44 உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கிகளை வனத்துறையினர் கைப்பற்றினர். தருமபுரி மாவட்ட வனத்துறையினால் கைப்பற்றப்பட்ட உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கிகள் காவல்துறையிடம் ஒப்படைக்கும் நிகழ்ச்சி தருமபுரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. இந்த நிகழ்ச்சிக்கு மாவட்ட ஆட்சியர் சரவணன் தலைமை தாங்கினார். இந்த நிகழ்ச்சியில் 44 உரிமம் இல்லாத நாட்டு துப்பாக்கிகளை காவல்துறையிடம் மாவட்ட வன அலுவலர் ராஜாங்கம் முறைப்படி ஒப்படைத்தார். தொடர்ந்து கைப்பற்றப்பட்ட நாட்டு துப்பாக்கிகளை ஆட்சியர் பார்வையிட்டார். இந்த நிகழ்வில் மாவட்ட வருவாய் அலுவலர் கவிதா, மாவட்ட ஆட்சியர் நேர்முக உதவியாளர் கவிதா, கூடுதல் காவல் கண்காணிப்பாளர் சோமசுந்தரம் மற்றும் வனசரக அலுவலர்கள் உள்ளிட்ட வனத்துறையினர் சம்பந்தப்பட்ட துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.

மண்டைக்காடு அருகே நீதிமன்ற உத்தரவை எதிர்த்து கணவன், மனைவி தற்கொலை மிரட்டல்

நாகர்கோவில், அக்.31

குமரி மாவட்டம் மண்டைக்காடு அருகே உள்ள சேரமங்கலம் பகுதியை சேர்ந்தவர் செல்வராஜ். இவர் வழி பாதையை ஆக்கிரமித்து வீடு அமைத்துள்ளதாக நீதிமன்றத்தில் வழக்குகள் தொடரப்பட்டன. இந்த பிரச்சனையில் இரணியல் மாவட்ட உரிமையியல் நீதிமன்ற உத்தரவின் படி நீதிமன்ற ஆணையாளராக வக்கீல் ஜான் சௌந்தர் (53) என்பவர் அறிவிக்கப்பட்டு செல்வராஜ் வீட்டில் வழிப்பாதை ஆக்கிரமிப்பு அகற்ற உத்தரவிடப்பட்டது.

இதை அடுத்து கடந்த 29ஆம் தேதி ஆணையாளராக நியமிக்கப்பட்ட ஜான் சௌந்தர் நீதிமன்ற உத்தரவை செயல்படுத்துவதற்காக செல்வராஜ் வீட்டை அளந்து வழி பாதை ஆக்கிரமிப்பை அகற்றும் நடவடிக்கைக்காக அங்கு சென்றார். மற்றும் கிராம நிர்வாக அதிகாரி, காவல்துறையினர், நில அளவையர் கொண்ட குழுவினரும் சென்றனர்.

அப்போது செல்வராஜ் அவர்களை வீட்டுக்குள் விடாமல் குடும்பத்தினருடன் சேர்ந்து நீதிமன்ற உத்தரவை செயல்படுத்த விடாமல் தடுத்து நிறுத்தியதாக கூறப்படுகிறது. நீதிமன்ற உத்தரவின் படி வந்த ஆணையர் வக்கீல் ஜான் சௌந்தர் மற்றும் அரசு அலுவலர்களை அவதூறான வார்த்தைகளால் பேசி, செல்வராஜ், அவரது மனைவி சாந்தா பாய் ஆகியோர் வீட்டின் முதல் தளத்துக்கு சென்று தங்கள் உடலில் மண்ணெண்ணெய் ஊற்றி நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த விடாமல் மிரட்டினார். இதனால் பரபரப்பு ஏற்பட்டது.

நீதிமன்ற உத்தரவை அமல்படுத்த விடாமல் தடுத்து நிறுத்தியவர்கள் மீது நடவடிக்கை எடுக்க ஜான் சௌந்தர் மண்டைக்காடு காவல் நிலையத்தில் புகார் அளித்தார். புகாரின் பேரில் போலீசார் செல்வராஜ் அவரது மனைவி சாந்தா பாய், மகன் எட்வின் வேல்ராஜ், கிருஷ்ணன் மற்றும் கண்டால் தெரியும் ஒரு பெண் உட்பட ஐந்து பேர் மீது வழக்கு பதிவு செய்துள்ளனர்.

களியக்காவிளை சந்திப்பில் பழக்கடையில் பணத்தை திருடிய வாலிபரை போலீசார் கைது



களியக்காவிளை, அக்.31

களியக்காவிளை பஸ் ஸ்டாண்டின் அருகே படந்தாலுமூடு பகுதியை சார்ந்த ஷாஜி குமார் (41) என்பவர் பழக்கடை நடத்தி வருகிறார். இந்நிலையில் சம்பவத்தன்று இரவு கடையை முடிவிட்டு வீட்டுக்கு சென்றுள்ளார். மறுநாள் காலை வந்து பார்த்த போது கடை உடைக்கப்பட்டு ரூ 45 ஆயிரம் பணத்தை திருடிச் சென்றது தெரிய வந்தது. அவர் உடனடியாக களியக்காவிளை போலீசுக்கு தகவல் கொடுத்தார். போலீசார் சம்பவ இடம் வந்து சி.சி.சி.டி.வி காமிரா பதிவுகளை ஆய்வு செய்தனர். போலீசார் ஆய்வில் அதே பகுதியை சார்ந்த அக்பர் பாஷா (29) என்பவர் பணத்தை திருடியதை தெரிந்து அவரை கைது செய்து நீதிமன்றத்தில் ஒப்படைத்தனர். நீதிமன்ற உத்தரவு படி அவரை சிறையில் அடைத்தனர்.

பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி மற்றும் குருபூஜை விழா

தினத்தமிழ் செய்தி தாளின் சார்பில் மாலை அணிவித்து மரியாதை

சிவகங்கை அக்.31

தமிழகம் முழுவதும் முத்துராமலிங்க தேவர் ஜெயந்தி மற்றும்குரு பூஜை விழா டேட் சொல்லு கடைபிடிக்கப் பட்டது, இதில் காரைக்குடியில் அமைந்துள்ள பசும்பொன் முத்துராமலிங்க தேவர் சிலைக்கு தினத்தமிழ் நாளிதழில் சார்பில் மாவட்ட செய்தியாளர் அண்ணாதுரை மாலை அணிவித்து மரியாதை செலுத்தினார், பிறகு அமைப்பின் சார்பில் அதன் தலைவர் வழக்கறிஞர் குமார் சார்பில் செய்தியாளருக்கு வரவேற்பு அளிக்கப்பட்டது.



பொள்ளாச்சியில் பசும்பொன் முத்துராமலிங்க தேவர் 119வது ஜெயந்தி விழா



கோவை அக்:31

பொள்ளாச்சியில் பசும் பொன்உ.முத்துராமலிங்க தேவர் அவர்களின் 119 வது ஜெயந்தி விழா மற்றும் 64 வது குருபூஜை விழா பொள்ளாச்சி தேர்நிலையம் அருகில் தேவர் வளாகத்தில் நடைபெற்றது.

விழாவிற்கு பொள்ளாச்சி சட்டமன்ற உறுப்பினர் நித்தியானந்தன், முன்னால் துணை சபாநாயகர் பொள்ளாச்சி வி.ஜெயராமன், த.வெ.க நிர்வாகிகள் மற்றும் முக்கிய பொருப்பாளர்கள், திமுக பொறுப்பாளர்கள், அமமுக பொறுப்பாளர்கள், தேவர் சங்க அமைப்புகள், பொள்ளாச்சி கிழக்கு காவல்நிலைய கடை உரிமையாளர்கள், கிருத்துவ அமைப்பினர்கள், முஸ்லீம் அமைப்பினர்கள், கலந்து கொண்டு ஐயாவின் திருவுருவ படத்திற்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர்.

விழாவில் பொள்ளாச்சி வட்டார தேவர் சமூக நல அறக்கட்டளை கௌரவ தலைவர் சொக்கனூர் நாகராஜ் ,தலைவர் சிவக்குமார், செலாளர் கனகு, பொருளாளர் முருகேஷ், ராஜா, மஹாராஜா, மதி, பிரபாகர், ஏ.வி.எம் ஆனந்த், தங்கவேல், கண்ணப்பன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும் விழாவில் 1000 நபர்களுக்கு அன்னதானம் செய்யப்பட்டது. நிகழ்ச்சிக்கு ஊர் பொது மக்கள் மாணவர்கள் இளைஞர்கள்எனபெரும் திரளானோர் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மற்றும் திண்டுக்கல் ஆகிய மாவட்டங்களில் நடைபெறும் பல்வேறு நிகழ்ச்சிகளில் கலந்துகொள்வதற்காக மதுரைக்கு வருகைதந்த இந்திய குடியரசு துணைத் தலைவர் சி.பி.ராதாகிருஷ்ணன் அவர்களை மதுரை விமான நிலையத்தில் மதுரைமாவட்டஆட்சித்தலைவர்நிஷாந்த்கிருஷ்ணா,இ.ஆ.ப., புத்தகம் வழங்கி வரவேற்றார்.

பெரியார் பல்கலைக்கழக கபடி போட்டி: காரப்பட்டு யுனிக் கல்லூரி மாணவிகள் முதலிடம் பிடித்து சாதனை!



கிருஷ்ணகிரி:அக்:31,

பெரியார்பல்கலைக்கழக அளவில் நடைபெற்ற கபடி போட்டியில் கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை அடுத்த காரப்பட்டு பகுதியில் செயல்பட்டு வரும் யுனிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகள் முதல் இடத்தினை பிடித்து சாதனை படைத்துள்ளனர்.

பெரியார் பல்கலைக் கழக அளவில் நடை பெற்ற இப்போட்டியானது திருச்செங்கோடு விவேகானந்தா மகளிர் கலை மற்றும் அறிவியல் கல்லூரியில் நடைப்பெற்றது. மேலும் இப்போட்டியில் இருபத்தைந்திற்கும் மேற்பட்ட அணிகள் பங்கேற்றன. இந்நிலையில் ஊத்தங்கரை அடுத்த காரப்பட்டு யுனிக் கலை மற்றும் அறிவியல் கல்லூரி மாணவிகள் சிறப்பாக விளையாடி முதல் இடத்தினை பிடித்து கோப்பை மற்றும் சான்றி தழை பெற்றனர். போட்டியில் வெற்றி பெற்ற கபடி அணியினரை கல்லூரியின் நிறுவனர் முனைவர் கா.அருள், இயக்குநர் திலகவதி அருள், செயலாளர் தமிழரசு, கல்லூரியின் முதல்வர், துறைத் தலைவர்கள், இருபால் பேராசிரியர்கள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொண்டனர். கபடி வீரர்களுக்கு பயிற்சி அளித்து ஊக்கப்படுத்திய உடற்கல்வி ஆசிரியர் பாலு, பயிற்சியாளர் சரவணன், விளையாட்டு ஒருங்கிணைப்பாளர் உதவிப் பேராசிரியர் ஜெயசீலன் ஆகியோரையும் வாழ்த்தினர். வெற்றி பெற்ற மாணவிகளுக்கு கோப்பை மற்றும் சான்றிதழை வழங்கும் போது சம்மந்தப்பட்ட விளையாட்டுத்துறை பேராசிரியர்கள் மற்றும் நடுவர்கள் உடனிருந்தனர்.

திண்டுக்கல் எம்எல்ஏ I.P.செந்தில்குமார் பிறந்தநாள் விழா கறிவிருந்துடன் கொண்டாட்டப்பட்டது




திண்டுக்கல், அக்.31

திண்டுக்கல் சட்டமன்ற உறுப்பினர் திமுக கிழக்கு மாவட்ட செயலாளர்ஐ.பி.செந்தில்குமார் எம்எல்ஏ அவர்களின்

பிறந்தநாளையொட்டி மாநகர திமுக சார்பில் அரசு மருத்துவமனை வாயிலில் கறிவிருந்து பொதுமக்கள் மற்றும் புறநோயாளிகளுக்கு ஐ.பி.எஸ்.செந்தூர் ஆதவன் வழங்கினார். நிகழ்ச்சிக்கு மாநகர செயலாளர் ராஜப்பா தலைமை தாங்கினார். மேயர் இளமதி முன்னிலை வகித்தார். நிகழ்சியில் மாநகர பொருளாளர் மீடியா சரவணன், மண்டலத் தலைவர்கள் ஆனந்த், ஜான் பீட்டர்,பகுதிகழகசெயலாளர் சூசை ராபர்ட், மாநகர இளைஞரணி அமைப்பாளர் ரகுமான், வார்டு செயலாளர் தன்ராஜ், பிரதிகள் லட்சுமி, ரஜினி குமார்,திமுக தொழில் நுட்ப அணி கிஷோர் உள்ளிட்டோர் பலர் கலந்து கொண்டனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை திமுக வார்டு பிரதிநிதி ரவி சேர்வை செய்திருந்தார்.

சிங்காரப்பேட்டை தீர்த்தகிரி வலசை ஏரி கால்வாய் ஆக்கிரமிப்புகள் அகற்றம்

5 ஏரிகளுக்குத் தண்ணீர் கொண்டு செல்லும் பணி தொடக்கம்



ஊத்தங்கரை வட்டம், சிங்காரப்பேட்டை தரப்பு, தீர்த்தகிரி வலசை ஏரியில் மழைக்காலங்களில் நீர் நிரம்பி வழிந்து தென்பெண்ணை ஆற்றில் வீணாக கலப்பதை 5 ஏரிகளுக்கு கொண்டு செல்ல வேண்டுமென்று, மாண்புமிகு தமிழ்நாடு முதலமைச்சர், மாண்புமிகு தொழில்துறை அமைச்சர், மாவட்ட ஆட்சித்தலைவர் சட்டமன்ற உறுப்பினர் ஆகியோர்களிடம் விவசாயிகள் தொடர்ந்து கோரிக்கை வைத்தனர்.

அதனைத்தொடர்ந்து, 50 ஆண்டுகாலமாக நிலுவையில் உள்ள இந்த கோரிக்கையினை, மாவட்ட ஆட்சித்தலைவர் உத்தரவின்படி, வட்டாட்சியர், வருவாய் துறை, வட்டார வளர்ச்சி அலுவலர்கள், நில அளவைத்துறை அலுவலர்கள் மூலம் அளவீடுகள் மேற்கொண்டு, 2 ஜே.சி.பி. இயந்திரங்கள் மூலம் கால்வாய்களில் உள்ள ஆக்கிரமிப்புகளை அகற்றும்பணிகள்நடைபெற்று வருகிறது.

தீர்த்தக்கிரி வலசை ஏரியிலிருந்து ஒரு கிலோமீட்டர் அளவுள்ள ஓடை, சர்வே எண்கள் 33, 38, 40, மற்றும் 69. இதில் மொத்த ஓடை புறம்போக்கு 2 ஏக்கர் 56 செண்ட் ஆக்கிரமிப்பு அகற்றப்பட்டு மாரகாண்ஏரிவரைசெல்கிறது. ஏரியிலிருந்து நாய்க்கன் ஏரி, வெங்கட்ராமன் குட்டை மற்றும் படவ கவுண்டன் ஏரி வரை செல்கிறது. தீர்த்தகிரி வலசை ஏரியில் மட்டும் சுமார் 222 ஏக்கர் நிலத்தில் சுமார் 155 விவசாயிகளும், நாய்க்கனூர் தரப்பில் 38 ஏர்ஸ் நிலம் மூலம் 50 விவசாயிகள் பயனடைகின்றனர். நாய்க்கன் ஏரி, வெங்கட்ராமன் குட்டை, மாரக்கான் ஏரி மற்றும் படவ கவுண்டன் ஏரி ஆகிய சுற்றுப்பகுதியில் உள்ள 80 ஏக்கரில் 53 விவசாயிகள் பயனடைகிறார்கள். இதனால், விவசாயிகளின் கிட்டத்தட்ட நூறாண்டுகள்கனவு நிறைவேறுகிறது. மேற்கண்ட ஏரிகளில் மழைக்காலங்களில் வரும் நீர் வீணாகாமல் சேமித்து வைப்பதால் நிலத்தடி நீர் உயரும். இதனால் குடிநீர் மற்றும் விவசாயத்திற்கு தண்ணீர் தங்குதடையின்றிகிடைக்கும் என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார். தெரிவித்தார்.

விளாத்திகுளம் சத்யா நகரில் அதிமுக சார்பில் முத்துராமலிங்க தேவரின் 119 ஆவது ஜெயந்தி விழா மற்றும் 64வது குருபூஜை விழா



விளாத்திகுளம் அக். 31.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளம் சத்யா நகரில் முத்துராமலிங்க தேவரின் 119 ஆவது ஜெயந்தி விழா மற்றும் 64 வது குருபூஜை விழா அதிமுக நகரச் செயலாளர் மாரிமுத்து தலைமையில் முன்னாள் அதிமுக எம்எல்ஏ என்.கே பெருமாள் முத்துராமலிங்க தேவரின் திருவுருவ படத்திற்கு மலர் தூவி மரியாதை செலுத்தினார். பின்பு பொதுமக்களுக்கு இனிப்புகள் வழங்கப்பட்டது.

இந்நிகழ்வில் அதிமுக ஒன்றிய செயலாளர் பால்ராஜ், அதிமுகதகவல் தொழில் நுட்ப அணி ஆனந்த், அதிமுக நிர்வாகிகள் சண்முகச்சாமி, ஆசை தம்பி, மகளிர் அணி சாந்தி, ஆறுமுகத்தாய் உட்பட நிர்வாகிகள் தொண்டர்கள் என பலர் கலந்து கொண்டனர்.

விளாத்திகுளத்தில் திமுக சார்பில் முத்துராமலிங்க தேவரின் 119 ஆவது ஜெயந்தி விழா மற்றும் 64வது குருபூஜை விழா



விளாத்திகுளம் அக். 31.

தூத்துக்குடி மாவட்டம் விளாத்திகுளத்தில் இந்திய சுதந்திரப் போராட்ட வீரர் பசும்பொன் உ.முத்துராமலிங்கத் தேவரின் 119வது ஜெயந்தி விழா மற்றும் 64 வது குருபூஜை விழாவை முன்னிட்டு விளாத்திகுளம் பாரதியார் பேருந்து நிலையம் முன்பு அமைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கும்,சத்யாநகரில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கும், விளாத்திகுளம் தேவர் மகாஜன சங்க கட்டிடத்தில் அமைக்கப்பட்டுள்ள திருவுருவப்படத்திற்கும் விளாத்திகுளம் சட்டமன்ற உறுப்பினர் மார் கண்டேயன் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

இந்த நிகழ்வில் விளாத்திகுளம் வட்டார தேவர் மகாஜன சங்கத் தலைவர் சக்திவேல் பாண்டியன், பொருளாளர் முத்துராமலிங்கம்,செயலாளர்கள் மாரியப்பன்,பிச்சையா முன்னாள் தலைவர்சுப்பிரமணியன், பொன்பாண்டியன், திமுக ஒன்றிய செயலாளர்கள் ராமசுப்பு, சின்னமாரிமுத்து, அன்பு ராஜன் இமானுவேல், ராதாகிருஷ்ணன், விளாத்திகுளம் பேரூர் கழக செயலாளர் வேலுச்சாமி, விளாத்திகுளம் பேரூராட்சி மன்ற தலைவர் சூர்யா அய்யன்ராஜ், பொதுக்குழு உறுப்பினர் ராஜாக்கண்ணு, விளாத்திகுளம் பேரூர் கழக நிர்வாகிகள் சின்னத்துரை, கருப்பசாமி தகவல் தொழில் நுட்ப அணி ஸ்ரீதர்,பாலகணேஷ், காளிதாஸ் உள்ளிட்ட கழக நிர்வாகிகள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

வால்வு மாற்றப்பட்ட முதியவருக்கு சிறப்பு 'ஹேங்கர்' வால்வு சிகிச்சை செய்த காவேரி மருத்துவமனை



சென்னை, அக்31,

ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துமனை கடுமையான இதய வால்வு கசிவு நோயால் பாதிக்கப்பட்ட 63 வயது முதியவருக்கு" டாவர்" எனப்படும் குறைந்த அளவு ஊடுருவல் சிகிச்சை முறையில் அதிநவீன 'ஹேங்கர்'செயற்கை வால்வை பொருத்தி வெற்றிகரமாக சிகிச்சை அளித்துள்ளது .தயத்திலிருந்து உடலுக்கு இரத்தத்தை கொண்டு செல்லும் முக்கிய தமனியான ஏரோட்டாவிற்கு செல்லும் இரத்த ஓட்டத்தை கட்டுப்படுத்துவது ஏரோடிக் வால்வின் பணியாகும். இந்த வால்வு சரியாக மூடாதபோது, இரத்தம் மீண்டும் இதயத்திற்குள் பின்னோக்கிப் பாயும். இதுவே ஏரோடிக் வால்வு கசிவு எனப்படும். இந்த முதியவருக்கு கசிவு மிக கடுமையாக இருந்தது. " டாவர்" சிகிச்சையின் போது, இந்த மாற்று வால்வு கதீட்டர் குழாய் வழியாக கொண்டு செல்லப்பட்டு நோயாளியின் ஏரோடிக் வால்வுக்குள் பொருத்தப்பட்டது. இந்த ஊடுருவல் குறைந்த சிசிச்சை முறையின் மூலம் மருத்துவர்கள் வழக்கமான திறந்த இதய அறுவை சிகிச்சை குறைபாடுள்ள வாழ்வை மாற்றினர்.

சிகிச்சைகுறித்து பேசிய ஆழ்வார்பேட்டை காவேரி மருத்துவமனையின் மூத்த இதய நிபுணர் டாக்டர் ராஜாராம் அனந்த ராமன் கூறுகையில், நோயாளிக்கு ஏற்கனவே செயற்கை மிட்ரல் வால்வு பொருத்தப்பட்டிருந்ததால் அவருக்கு மீண்டும் ஒரு அறுவை சிகிச்சை செய்வது சவாலானகாரியமாக இருந்தது. மேலும் அவரது பாதிக்கப்பட்ட வால்வில் கால்சியம் படிவுகள் குறைவாக இருந்தது ஆனாலும் ஹேங்கர் வால்வு தொழில் நுட்பம் கை கொடுத்தது .அதை சிறப்பு நங்கூர அமைப்பு வால்வை சரியான இடத்தில் நிலைநிறுத்த உதவியது .

சிகிச்சைக்கு பிறகு வாழ்வில் எந்த ஒரு கசிவும் காணப்படவில்லை . சிக்கலானஇதயஅமைப்பு குறைபாடுகளைகையாள தனிப்பட்ட சிகிச்சை திட்டமிடலும் நவீன வால்வு தொழில்நுட்பமும் எவ்வளவு முக்கியம் என்பதை இந்த சிகிச்சை நிருபித்துள்ளது என்றார்.

நாகர்கோவில் மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்திலிருந்த பழங்கால மரக்கல் கன்னியாகுமரி அருங்காட்சியகத்திற்கு ஒப்படைப்பு



நாகர்கோவில், அக்.31

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் அலுவலக முகப்பில் பழங்கால மரக்கல் காணப்பட்டது. இந்த கல்லாகிய மரம் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன் வாழ்ந்த தாவரங்கள் மற்றும் விலங்கினங்கள், மண்சரிவுகள், நிலநடுக்கம் போன்ற இயற்கை பேரழிவுகளால் மண்ணில் புதையுறும் இவ்வகை மரங்கள் இயற்கை நிகழ்வுகளால் கல்லாக மாறுதலே தொல்லுயிர் எச்சங்கள் எனப்படுகிறது .

பூமிக்கு அடியில் புதையுறும் மரங்களின் செல்களுக்குள், மண்ணிலும், கல்லிலும்உள்ளசிலிக்கா, இரும்பு போன்ற தாதுக்கள் பல்லாயிரம் ஆண்டுகளாக படிந்து, மரத்தின் ஆண்டு வளையங்கள், மரத்தின் வடிவமைப்பு மாறாமல் கல்லாக மாறுகிறது.

கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியர் அலுவலக வளாகத்தில் இருந்த கல்லாகிய மரத்தினை, கன்னியாகுமாரி அருங்காட்சியகத்தில் பொதுமக்கள் பார்வைக்கு காட்சிப் படுத்துவதற்கு ஏதுவாக கன்னியாகுமரி மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப், அனுமதி பெற்று, கன்னியாகுமரி ஆட்சியர் அவர்களின் நேர்முக உதவியாளர் (பொது) எஸ்.கார்லிஸ் வரி முன்னிலையில், கன்னியாகுமரி அரசு அருங்காட்சியக காப்பாளர் பா.ஜென்சி என்பவரிடம் வழங்கப்பட்டது. அவர் நேரில் பெற்றுக் கொண்டார். கன்னியாகுமரி மாவட்டத்தின் அருங்காட்சியகத்தினை காண வரும் அனைத்து பார்வையாளர்களுக்கும் இந்த கல்லாகிய மரத்தையும் இனி காணலாம்.

ஈரோடு வீரப்பம் பாளையம் பிரிவில் லோட்டஸ் கண் மருத்துவமனை

அமைச்சர் விஜய் பாலாஜி திறந்து வைத்தார்



ஈரோடு, அக். 31 தமிழ் நாடு கேரளாவில் லோட்டஸ் கண் மருத்துவமனை செயல் படுகிறது. இதை தொடர்ந்து இப் போது ஈரோடு வீரப்பம் பாளையம் பிரிவில் 11 வது கிளை திறக்கப்பட்டு உள்ளது . இதன் திறப்புவிழா நிர்வாக இயக்குனர் சங்கீதா சுந்தர மூர்த்தி தலைமையில் நடந்தது. இதில் அமைச்சர் விஜய் பாலாஜி கலந்து கொண்டு புதியமருத்துவமனையை திறந்து வைத்தார். எம் எல் ஏ க்கள் ஆனந்த் மோகன் சண்முகன் ஆகியோர் முன்னிலை வகித்தனர். திறப்பு விழாவிற்கு அமைச்சர் கே ஏ செங் கோட்டையன் வீடியோ மூலம் வாழ்த்து செய்தி அனுப்பி இருந்தார். இது பற்றி நிர்வாக இயக்குனர் சங்கீதா சுந்தர மூர்த்தி கூறியதாவது 9 ஆயிரம் சதுர அடி பரப் பளவில் அமைந்துள்ள இந்த லோட்டஸ் மருத்துவ மனை தென்னிந்தியாவின் முன்னணி கண் மருத்துவ நிறுவனங்களில் ஒன்றான லோட்டஸ் ஐ ஹாஸ்பிடல் இன்ஸ்டிடியூட், ஈரோட்டில் 11.வது முழுமையான கண் மருத்துவ மனை திறக்கப்பட்டு உள்ளது. இந்த கண் மருத்துவ மனை பல மக்களுக்கு தரமான கண் சிகிச்சை சேவைகளை வழங்கும் நோக்கில் மேற்கொள்ளப்பட்டுள்ளது .

நவீன கண் சிகிச்சை சேவைகள், மருத்துவ நிபுணத்துவம் மற்றும் நோயாளிகளுக்குமுக்கியத்துவம் அளிக்கும் சிகிச்சைமுறைகளை மக்களுக்கு வழங்குவதில் லோட்டஸ் கண் மருத்துவமனை கொண்டுள்ள உறுதிப்பாட்டை இந்தப் புதிய மருத்துவ மனை மேலும் வலுப்படுத்துகிறது . இவ்வாறு அவர்கூறினார். இயக்குனர் டாக்டர் ராம லிங்கம் மற்றும் மருத்துவர்கள், சுகாதாரத்துறை வல்லுநர்கள், சிறப்பு அழைப்பாளர்கள் உள்பட பலர் இதில் கலந்து கொண்டனர்.

விவசாயிகள் மானிய உரம் பெற புதிய நடைமுறை ;மாவட்ட ஆட்சியர் அறிவிப்பு

நாகர்கோவில், அக்.31

கன்னியாகுமரி மாவட்டத்தில் விவசாயிகளுக்கு மானிய விலையில் உரங்கள் வழங்கப்பட்டு வந்த முறையில் புதிய மாற்றங்களை மத்திய அரசு கொண்டு வந்துள்ளது. இனி "உழவன்அடையாள எண்" அடிப்படையில் மட்டுமே உரங்கள் வழங்கப்படும் என மாவட்ட ஆட்சியர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார். இதுவரை ஆதார்எண்ணை அடிப்படையாகக் கொண்டு, "போஸ்" இயந்திரத்தில் விவரங்களைப் பதிவு செய்து விவசாயிகளின் தேவைக் கேற்ப உரங்கள் வழங்கப்பட்டு வந்தன. தற்போது மத்திய அரசின் வழிகாட்டு தலின்படி "உர விற்பனைக்கான கட்டமைப்பு " முறை நடைமுறைப்படுத்தப்படுகிறது.

தமிழகத்தில் முதற்கட்டமாக தேர்வு செய்யப்பட்டுள்ள 18 மாவட்டங்களுள் கன்னியாகுமரி மாவட்டமும் ஒன்று. இதன்கீழ் "உழவன் அடையாள எண்"அடிப்படையில் பதிவு செய்துள்ள விவசாயிகளுக்கு அவர்கள் சாகுபடி செய்யும் பயிர் மற்றும் பரப்பளவின் அடிப்படையில் மட்டுமே உரங்கள் விநியோகிக்கப்படும். இந்த முறை அமல்படுத்தப்பட்டபின், விவசாயிகள் உரக்கடைகளில்உரம் வாங்கும்போது, தங்கள் விவசாய அடையாளபதிவு எண் ஐ இதற்காக உருவாக்கப்பட்டுள்ள விவசாயிகள் தொழில் ஆப்பில் உள்ளீடு செய்து கியூ ஆர் கோடு பெற்றுக்கொண்டு அதை வைத்து உரக்கடைகளில் உரம் வாங்கலாம்.

எனவே மாவட்டத்திலுள்ள அனைத்து விவசாயிகளும் உடனடியாக பதிவு செய்து கொள்ள வேண்டும். ஏற்கனவே பதிவு செய்தும், தங்களது அனைத்து நிலங்களின் சர்வே எண்களையும் முழுமையாகப் பதிவு செய்யாதவர்கள், உடனே அருகில் உள்ள பொது சேவை மையத்தையோ அல்லது வேளாண்மை உதவி இயக்குநர் அலுவலகத்தையோ அணுகி சர்வே எண்களை இணைக்க வேண்டும். உரம்பெறுவதற்கு மட்டுமின்றி, அரசின் அனைத்து வேளாண் மானியத் திட்டங்கள், பயிர்க் காப்பீடு சலுகைகள் மற்றும் பயிர்க் கடன்களைப் பெறுவதற்கும் இந்த "விவசாய அடையாள அட்டை மிகவும் அவசியம் என்பதால் விவசாயிகள் அனைவரும் விரைந்து பதிவு செய்யுமாறு மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்துள்ளார்.

குமரி பண்பலை வானொலியின் 43 வது உதயவிழா கலெக்டர் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார்



நாகர்கோவில், அக்.31 கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் மாநகராட்சிக்குட்பட்ட கோணம் பகுதியில் அமைந்துள்ள ஆகாஷ் வாணி, குமரி பண்பலை வானொலி நிலையத்தின் 43 வது உதயவிழா நேற்று நடைபெற்றது. மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் குத்துவிளக்கேற்றி துவக்கி வைத்தார். பின்னர் அவர் கூறியதாவது: வானொலி ஓர் தனித்துவமான ஊடகம். அறிவியல் மற்றும் தொழில்நுட்ப வளர்ச்சியில் எத்தனையோ மாற்று ஊடகங்கள் வந்து கொண்டே இருந்தாலும், தனக்கென தனி முத்திரை பதித்துள்ள ஊடகம் வானொலி. குறிப்பாக அரசின் நலத்திட்டங்களை எளிய முறையில் உரையாடல் மூலம் மக்களிடம் கொண்டு சேர்ப்பதில் வானொலியின் பங்கு முக்கியத்துவம் வாய்ந்தது.

நமது குமரி மாவட்டத்திற்கு, ஆகாசவாணி வானொலி சேவையில் ஓர் தனி சிறப்பு இடம் உண்டு. நமது மாவட்டத்தில் தான், நம் நாட்டிலேயே முதன் முதலாக வட்டார உள்ளூர் வானொலி ஒலிபரப்பு சேவை 1984 ஆம் ஆண்டு இதே நாளில் துவங்கப்பட்டது. 42 ஆண்டுகளை நிறைவு செய்து இன்று 43வது ஆண்டில் அடியெடுத்து வைக்கும் குமரி பண்பலை வானொலிக்கு எனது மனமார்ந்த வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கிறேன். இவ்வாறு கூறினார்.

நடைபெற்ற நிகழ்ச்சியில் ஆகாஷ் வாணி, நாகர்கோவில் குமரிபண்பலை 101 –ன் நிர்வாகத்தலைவர் கே.சண்முகரமணி, நிகழ்ச்சி பிரிவு தலைவர் எஸ்.நவரத்தினா, நிகழ்ச்சி பொறுப்பாளர் ஜேக்கப், பொறியாளர்கள், அலுவலர்கள், அறிவிப்பாளர்கள் பலர் கலந்துகொண்டனர்.



இந்தியத் துணைக் குடியரசுத்தலைவர் சி.பி. இராதாகிருஷ்ணன், 30.10.2026 அன்று திண்டுக்கல் மாவட்டம், காந்திகிராம கிராமிய நிகர்நிலை பல்கலைக் கழகத்தில் நடைபெறும் பொன்விழாக் கொண்டாட்டங்கள் மற்றும் 39வது பட்டமளிப்பு விழாவில் பங்கேற்பதற்கு வருகை புரிந்துள்ளதையொட்டி, காந்திகிராம சுகாதார மற்றும் குடும்பநல பயிற்சி மைய வளாகத்தில் அமைக்கப்பட்டுள்ள ஹெலிபேடு தள பகுதியில், தமிழ்நாடு ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர் முன்னிலையில், வணிகவரி மற்றும் பதிவுத்துறை அமைச்சர் மோகேஷ் தமிழ்செல்வன் மலர்கொத்து வழங்கி வரவேற்றார். உடன் திண்டுக்கல் மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி இ.ஆ.ப., மாவட்ட காவல் கண்காணிப்பாளர் ஜெயக்குமார் இ.கா.ப., ஆகியோர் உள்ளனர்

நாகர்கோவில் அருகே சாலையில் நாய் குறுக்கே வந்ததால் மோட்டார் சைக்கிளில் இருந்து தவறி விழுந்து தொழிலாளி பலி



சுசீந்திரம்.அக்31 நாகர்கோவில் அருகே உள்ள வைராவிளை பகுதியை சேர்ந்தவர் முருகேசன்வயது 51, தச்சு தொழிலாளியான இவர் தனது மோட்டார் சைக்கிளில் சம்பவத்தன்று (2210 2026) வைராவிளை பகுதியில் ரோட்டில் வந்து கொண்டிருந்தார். அப்போது அந்த வழியாக வந்த நாய் ஒன்று சாலையில் திடீரென குறுக்கே பாய்ந்தது . இதில் கட்டுப்பாட்டை இழந்த முருகேசன்நிலைதடுமாறி மோட்டார் சைக்கிளுடன் கீழே விழுந்தார். படுகாயம் அடைந்த அவரை மீட்டு சிகிச்சைக்காக சுசீந்திரம் அருகே உள்ள தனியார் மருத்துவமனையில் சேர்த்தனர். அங்கு சிகிச்சையில் இருந்த முருகேசன் பரிதாபமாக நேற்று முன்தினம் மதியம் 12.15 மணிக்கு இறந்து போனார். இதுகுறித்து அவரது மனைவி பொன் மலர் சுசீந்திரம் காவல் நிலையத்தில்புகார்அளித்தார். புகாரின் பேரில் சுசீந்திரம் போலீஸ் இன்ஸ்பெக்டர் அருள் பிரகாஷ், சப்இன்ஸ்பெக்டர் தனீஷ் லியோன் ஆகியோர் உடலை மீட்டு பிரேத பரிசோதனைக்காக ஆசாரிப்பள்ளம் அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனைக்கு அனுப்பிவைத்து வழக்கு பதிவு செய்து விசாரணை மேற்கொண்டு வருகின்றனர்.

பசும்பொன் தேவர் நேர்மை, தியாகம் மிக்க தேசியத் தலைவர்: குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் புகழாரம்



பசும்பொன் பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் ஜெயந்தி மற்றும் குருபூஜையை முன்னிட்டு, குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன், ராமநாதபுரம் மாவட்டம் பசும்பொன்னில் உள்ள தேவரின் நினைவிடத்தில் மலர் தூவி மரியாதை செலுத்தினார்.

பின்னர் தேவரின் நினைவு இல்லத்தைப் பார்வையிட்ட அவர், தேவரின் உறவினர்களுடன் கலந்துரையாடினார். தொடர்ந்து செய்தியாளர்களிடம் பேசிய குடியரசுத் துணைத் தலைவர், பசும்பொன் முத்துராமலிங்கத் தேவரின் வாழ்க்கை, அரசியல் பங்களிப்பு மற்றும் சமூகப் பணிகளை நினைவுகூர்ந்து புகழாரம் சூட்டினார்.

அவர் கூறியதாவது: பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் சுதந்திரப் போராட்டக் காலத்தில் மட்டுமின்றி, அதற்குப் பிறகும் தொடர்ந்து சமுதாயத்திற்காக உழைப்பதையே தனது வாழ்வின் குறிக்கோளாகக் கொண்டு செயல்பட்டவர். நேதாஜி சுபாஷ் சந்திரபோஸின் நம்பிக்கைக்குரியவராகவும், அவரைத் தலைவராக ஏற்றுக்கொண்டவராகவும் விளங்கினார். இந்தியாவின் தேசிய எழுச்சிக்கும், தமிழகத்தில் தெய்வீக எழுச்சிக்கும் தனது வாழ்நாள் முழுவதும் பாடுபட்டார்.

தனது தலைவர் நேதாஜிக்கு எந்தத் துரோகத்தையும் செய்ய விரும்பாதவர் தேவர். சில அரசியல் சமரசங்களைச் செய்திருந்தால், அவர் தமிழகத்தின் முதலமைச்சராகப் பொறுப்பேற்றிருக்கும் வாய்ப்பு இருந்திருக்கும். ஆனால், தனது கொள்கைகளுக்கு எதிராக எந்தச் சமரசத்தையும் அவர் செய்து கொள்ளவில்லை. வாழ்நாள் முழுவதும் நேர்மை, தவம், கண்ணியம் ஆகியவற்றைக் கடைப்பிடித்தார்.

தாழ்த்தப்பட்ட மக்களின் உரிமைகளுக்காகவும் தேவர் குரல் கொடுத்தார். மதுரை மீனாட்சியம்மன் கோயிலில் தாழ்த்தப்பட்ட மக்களின் ஆலயப் பிரவேசத்திற்கு எதிர்ப்பு ஏற்பட்டபோது, அந்தப் போராட்டத்தைத் தானே முன்னின்று நடத்துவதாக உறுதியளித்தார். அதன்பிறகே ஆலயப் பிரவேசம் வெற்றிகரமாகநடைபெற்றது. தனது சொத்தில் பெரும்பகுதியையும் தாழ்த்தப்பட்ட மக்களுக்காக வழங்கினார்.

இத்தகைய மகத்தான தேசியத் தலைவரான தேவரின் பிறப்பும் இறப்பும் ஒரே நாளில் அமைந்திருப்பது, அவரது சிறப்பை உணர்த்துகிறது. அவருக்கு நாம் செலுத்தும் உண்மையான அஞ்சலி, தமிழ் மண்ணில் தேசியத்தையும் தெய்வீகத்தையும் என்றும் பாதுகாப்பதாகும். இந்தியா முழுவதும் உள்ள மக்கள் அவருக்குஅஞ்சலிசெலுத்துவது கடமையாகும். உலகம் உள்ளவரை அவரதுபுகழ்நிலைத்திருக்கும்.

இவ்வாறு குடியரசுத் துணைத் தலைவர் சி.பி. ராதாகிருஷ்ணன் தெரிவித்தார்.

தென்காசி மத்திய மாவட்ட தவெக சார்பில் தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் வழங்கும் விழா



தென்காசி, அக்.31 தென்காசி மாவட்டம் மேலகரம் சமுதாய நலக் கூடத்தில் 200க்கும் மேற்பட்ட தூய்மை பணியாளர்களுக்கு நலத்திட்ட உதவிகள் தமிழ்நாடு முதலமைச்சர் ஜோசப் விஜய் அறிவுறுத்தலையின்படி பொதுப்பணித்துறை அமைச்சர் புஸ்லி ஆனந்த் வேண்டுகோளின் படி தென்காசி மத்திய மாவட்ட தமிழக வெற்றிக் கழகம் சார்பில் சமீர் ரிஸ்வான் தலைமையில் ,மாவட்ட துணை செயலாளர் அபுபக்கர் சித்திக் முன்னிலையில் வழங்கப்பட்டது பின்னர் தூய்மை பணியாளர்கள் அனைவருக்கும் மதிய உணவு வழங்கப்பட்டது இந்நிகழ்ச்சியில் தென்காசி மத்திய மாவட்ட தமிழக வெற்றிக் கழகத்தை சேர்ந்த முக்கிய நிர்வாகிகள் உறுப்பினர்கள் கலந்து கொண்டனர்.



தூத்துக்குடியில் தேவர் ஜெயந்தி விழாவை முன்னிட்டு அவரது சிலைக்கு முன்னாள் அமைச்சர் கீதாஜீவன் உள்பட பல்வேறு அமைப்பினர் மாலை அணிவித்து மரியாதை செலுத்தினர். பசும்பொன் முத்துராமலிங்க தேவர் 119 ஆவது ஜெயந்தி விழாவை முன்னிட்டு தூத்துக்குடி மூன்றாவது மைல் பாலம் அருகே உள்ள முத்துராமலிங்க தேவர் திருவுருவ சிலைக்கு வடக்கு மாவட்ட திமுக சார்பில் மாவட்டச் செயலாளர், முன்னாள் அமைச்சர் கீதாஜீவன், மேயர் ஜெகன் பெரியசாமி ஆகியோர் மாலை அணிவித்து மரியாதை செய்தனர். விழாவில் மாநகர செயலாளர் ஆனந்தசேகரன், மாமன்ற உறுப்பினர்கள் கட்சி பிரதிநிதிகள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

தவெக அரசிற்கு கண்டன தீர்மானம்!



குன்னூர் பர்லியாறு பகுதியில் மழையில் ஏற்பட்ட மண் சரிவில் சிக்கி உயிரிழந்த அரசு பேருந்து ஓட்டுனர் ஜனகராஜ் இறப்பிற்கு இது நாள் வரை எந்த ஒரு இரங்களும் தெரிவிக்காத தவெக அரசை கண்டித்து குன்னூர் நகரமன்ற கூட்டத்தில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.நகராட்சி ஆணையாளர்மற்றும் நகராட்சி தலைவர் சுசீலா, நகராட்சி துணை தலைவர் வாசிம் ராஜா ஆகியோர் தலைமையில் நடைபெற்ற சிறப்பு கூட்டத்தில் நகர மன்ற உறுப்பினர் ராமசாமி கண்டனம் தெரிவித்தார்.

திருவண்ணாமலை அருகே வெட்டிவேர் ஏற்றி வந்த லாரி சிறை பிடிப்பு

தென்னிந்திய விவசாய சங்கத்தினர் போராட்டம்



திருவண்ணாமலை அக்.31 நறுமணம் மிகுந்த வெட்டிவேர் சோப்பு, ஷாம்பு, மாலை, மேட் மற்றும் ஆயுர்வேத மருத்துவம் என 200 வகையான பொருட்கள் தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது. இதனால், உள்ளூர் மற்றும் வெளிநாடுகளில் நல்ல வரவேற்பு உள்ளது. பல விவசாயிகள் தனியார் நிறுவனங்களின் பங்களிப்புடன் வெட்டிவேர் நாற்றுகளை வாங்கி சாகுபடி பணியில் ஈடுபட்டு வருகின்றனர். அறுவடையாகும் வெட்டிவேர் ஒரு கிலோ ரூ.200வரை விற்பனையாகி வருகிறது. திருவண்ணாமலை மாவட்டத்தில் ஏராளமான விவசாயிகள் வெட்டிவேர் பயிரிட்டு சாகுபடி செய்து வருகின்றனர். திருவண்ணாமலை பகுதியில் திண்டுக்கல் பகுதியைச் சேர்ந்த ஆரோமேட்டிக் ரூட் குயின் பார்மர் ப்ராடக்ட் என்ற நிறுவனம் காட்டு சித்தாமூரைச் சேர்ந்த ஜெயபிரகாஷ், சோ.நம்பியந்தல் ரமேஷ் உள்பட பல விவசாயிகளிடம் வெட்டிவேர் கொள்முதல் செய்ய ஒப்பந்தம் ஏற்படுத்தி உள்ளது. ஆனால் அந்நிறுவனம் குறிப்பிட்ட காலத்தில் பயிரை கொள்முதல் செய்யவில்லை என்றும், அப்படி கொள்முதல் செய்தாலும் சரிவர பணம் தரவில்லை என்றும் விவசாயிகள் குற்றம் சாட்டியுள்ளனர். இதன்காரணமாக அந்நிறுவனத்திற்கு சொந்தமான வெட்டிவேர் ஏற்றி வந்த லாரியை சோமாசிபாடி பகுதியில் விவசாயிகள் சிறை பிடித்து போராட்டத்தில் ஈடுபட்டனர். இந்தப் போராட்டத்திற்கு தென்னிந்திய விவசாய சங்க மாநிலத் தலைவர் முத்தகரம் பழனிசாமி தலைமை தாங்கினார். மாநில பொருளாளர் ரா.சுப்பிரமணி முன்னிலை வகித்தார். கிளைத் தலைவர் செந்தில், வீரன் துரைராஜ் மற்றும்அண்ணாவிவசாயிகள் சங்கத் தலைவர் சிவக்குமார் உள்பட பலர் கலந்து கொண்டனர். இதை எடுத்து அந்நிறுவனத்தின் உயர் அதிகாரிகள் விவசாய சங்க பிரதிநிதிகளுடன் பேச்சுவார்த்தையில் ஈடுபட்டனர். இதில் சுமுக முடிவு ஏற்பட்டது. 20 நாட்களில் உரிய நஷ்ட ஈடு தருவதாக நிறுவனம் உறுதி அளித்தன் பேரில் லாரியை விவசாயிகள் விடுவித்தனர்.



ஏரிகள் மற்றும் சமவெளிப் பகுதிகளில் சீமைக்கருவேல மரங்கள் அகற்றும் பணி தீவிரம்!

கிருஷ்ணகிரி :ஆக :31 கிருஷ்ணகிரி ஊராட்சி ஒன்றியம், காட்டிநாயனப்பள்ளி ஊராட்சி, மேல்கரடிகுறி கிராமத்தில் உள்ள சின்னப்பநாயக்கன் ஏரியில், ஊரக வளர்ச்சித்துறை சார்பாக, 30 ஏக்கர் பரப்பளவில் உள்ள சீமை கருவேல மரம் அகற்றும்பணிகளைமாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் துவக்கி வைத்தார். மாவட்ட ஆட்சித்தலைவர் தெரிவித்ததாவது : கிருஷ்ணகிரி மாண்பமை சென்னை உயர்நீதிமன்ற அறிவுறுத்தலின்படி, மாவட்டத்தில், பொதுப்பணித்துறை மற்றும் ஊரக வளர்ச்சித்துறைக்குட்பட்ட ஏரிகள் மற்றும் சமவெளிப்பரப்புகளில் 330 ஏக்கர் பரப்பளவில் சீமை கருவேல மரங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளது. ஏற்கனவே, பொதுப்பணித்துறை ஏரிகள் மற்றும் சமவெளிப்பரப்புகளில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றும் பணிகள் நடைபெற்று வருகிறது. அதனைத்தொடர்ந்து, மாவட்டத்தில் உள்ள ஊராட்சி ஒன்றியங்களில், ஊரக வளர்ச்சித்துறைக்கு சொந்தமான ஏரிகள் மற்றும் சமவெளிப்பரப்புகளில் உள்ள 166 ஏக்கர் பரப்பளவில் உள்ள சீமை கருவேல மரங்கள் அகற்றும் பணி இன்று துவக்கி வைக்கப்பட்டுள்ளது என மாவட்ட ஆட்சித்தலைவர் .ச.தினேஷ் குமார் தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில், மாவட்ட வருவாய் அலுவலர் .மஞ்சுளா, மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை திட்ட இயக்குநர் . உமாமகேஸ்வரி, உதவி இயக்குநர்.ஊராட்சிகள். .வடிவேலன், வட்டாட்சியர் .ராஜலட்சுமி, வட்டார வளர்ச்சி அலுவலர்கள் .உமாசங்கர், . செல்லக்கண்ணாள் மற்றும் துறை சார்ந்த அலுவலர்கள், பொதுமக்கள் கலந்து கொண்டனர்.

தூத்துக்குடி மாநகராட்சி மாமன்றக் கூட்டத்தில் முக்கிய தீர்மானங்கள்: டெங்கு தடுப்புப் பணிக்கு 294 பணியாளர்கள் நியமனம்!



தூத்துக்குடி: தூத்துக்குடி மாநகராட்சியின் சாதாரண மாமன்றக் கூட்டம் மேயர் ஜெகன் பெரியசாமி தலைமையில், ஆணையர் பிரியங்கா, துணை மேயர் ஜெனிட்டா செல்வராஜ் ஆகியோர் முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் மாநகராட்சியின் வளர்ச்சிப் பணிகள், பொதுச் சுகாதாரம் மற்றும் பொதுமக்கள் நலன் சார்ந்த பல்வேறு முக்கியத் தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

டெக்ஸ்கோ பணியாளர்களுக்கு ஊதிய உயர்வு

மாநகராட்சி கட்டிடங்கள் மற்றும் பாதுகாப்புப் பணிகளில் டெக்ஸ்கோ நிறுவனம் மூலம் ஒப்பந்த அடிப்படையில் பணிபுரியும் 2 மேற்பார்வையாளர்கள் மற்றும் 8 பாதுகாவலர்களுக்கு அகவிலைப்படி உயர்வு வழங்க ஒப்புதல் அளிக்கப்பட்டது. இதன்படி, காவலாளியின் மாத ஊதியம் ரூ.24,603ல் இருந்துரூ.27,646ஆகவும், தலைமைக் காவலாளியின் ஊதியம் ரூ.27,498ல் இருந்து ரூ.30,540ஆகவும் உயர்த்தப்பட்டுள்ளது. இதற்காக ஆண்டுக்கு கூடுதலாக ஏற்படும் ரூ.4,65,336 செலவினத்தை மாநகராட்சி பொது நிதியிலிருந்து வழங்க அனுமதி அளிக்கப்பட்டது.

பேருந்து நிலையப் பணியாளர்களுக்கு தினக்கூலி உயர்வு

வடக்கு மண்டல புதிய பேருந்து நிலையம் மற்றும் பேரறிஞர் அண்ணா பேருந்து நிலையத்தில் வாகன நுழைவுக் கட்டணம் வசூலிக்கும் பணியில் ஈடுபட்டுள்ள தினக்கூலிப் பணியாளர்களுக்கு, மாவட்ட ஆட்சியரின் உத்தரவின்படி நாள் ஒன்றுக்கு ரூ.595 ஊதியம் வழங்கத் தீர்மானிக்கப்பட்டது.

டெங்கு தடுப்புக்கு 294 பணியாளர்கள்

வடகிழக்குப் பருவமழையை முன்னிட்டு டெங்கு, சிக்குன்குனியா உள்ளிட்ட நோய்கள் பரவுவதைத் தடுக்க கூடுதல் களப் பணியாளர்களை முழுநேரப் பணியில் ஈடுபடுத்த முடிவு செய்யப்பட்டது. இதற்காக மாநகராட்சியின் வடக்கு, கிழக்கு, மேற்கு, தெற்கு மண்டலங்களில் கூடுதலாக 294 டெங்கு தடுப்புப் பணியாளர்கள் நியமிக்கப்பட உள்ளனர். 1,000 தெருநாய்களுக்கு கருத்தடை

மாநகராட்சிப் பகுதியில் தெருநாய்களின் இனப்பெருக்கத்தைக் கட்டுப்படுத்தவும், வெறிநோய் பரவலைத் தடுக்கவும் 'Rescuing Animals In Need' தொண்டு நிறுவனம் மூலம் மேலும் 1,000 நாய்களுக்கு கருத்தடைச் சிகிச்சை மேற்கொள்ள ரூ.20 லட்சம் ஒதுக்கீடு செய்யப்பட்டது. மேலும், நாய்கள் தொடர்பான புகார்களைப் பொது மக்கள் தெரிவிக்க 9443204030 என்ற புதிய பி.எஸ்.என்.எல். கைப்பேசி எண் அறிமுகப்படுத்தப்பட உள்ளது.

குடிநீர் மற்றும் அடிப்படை வசதிப் பணிகள்

கிழக்கு மற்றும் வடக்கு மண்டலங்களில் குடிநீர் விநியோகத்தைச் சீரமைத்தல், குழாய்களை நீட்டித்தல், கசிவுகளைச் சரிசெய்தல் உள்ளிட்ட பணிகளுக்கு குடிநீர் மற்றும் வடிகால் நிதியின் கீழ் நிர்வாக அனுமதி வழங்கப்பட்ட விவரங்கள் கூட்டத்தில் பதிவு செய்யப்பட்டன.

அம்மா உணவக வாகன வாடகை உயர்வு

அம்மா உணவகங்களுக்குக் காய்கறிகள் கொண்டு செல்லும் சரக்கு வாகனத்தின் வாடகை, டீசல் மற்றும் உதிரிபாகங்களின் விலை உயர்வைக் கருத்தில் கொண்டு, நாள் ஒன்றுக்கு ரூ.700ல் இருந்து 30 சதவீதம் உயர்த்தி ரூ.910 ஆக வழங்க அனுமதி அளிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் மாநகராட்சி துணை ஆணையர், அதிகாரிகள் மற்றும் மாமன்ற உறுப்பினர்கள் பலர் கலந்து கொண்டனர்.

சேலம் மாவட்ட அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் முகாம்



சேலம் மாவட்ட அளவில் மாற்றுத்திறனாளிகளுக்கான சிறப்பு குறைதீர்க்கும் நாள் முகாம் சேலம் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்றது. அந்த முகாமில் மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் மூலம் சேலம் மாவட்ட அளவில் முகாமில் கலந்து கொண்ட மாற்றுத்திறனாளிகளிடமிருந்து பல்வேறு கோரிக்கைகள் தொடர்பாக 174 மனுக்கள் பெற்றுக் கொள்ளப்பட்டது. அந்த மனுக்களின் மீது உரிய நடவடிக்கை மேற்கொள்ள தொடர்புடைய அலுவலர்களுக்கு சேலம் மாவட்ட ஆட்சித் தலைவர் இளம் பகவத் அறிவுறுத்தினார். 2 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ. 7360/ மதிப்பில் காதொலி கருவிகளும் 1 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ 900/ மதிப்பில் ஊன்று கோல் என மொத்தம் 3 மாற்று திறனாளிகளுக்கு ரூ. 8260/ மதிப்பிலான நலத்திட்ட உதவிகளை மாவட்ட ஆட்சியர் இளம் பகவத் வழங்கினார். இந்த நிகழ்ச்சியில் தனித்துணி ஆட்சியர் (சமூக பாதுகாப்பு திட்டம்) ஜானகி, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் செண்பகவல்லி உள்ளிட்ட தொடர்புடைய துறை அலுவலர்கள் மற்றும் மாற்றுத்திறனாளிகள் கலந்து கொண்டனர்.



இராமநாதபுரம் மாவட்டம், கமுதி வட்டம், பசும்பொன் கிராமத்தில் (30.10.2026) தெய்வீகத் திருமகனார் உ.முத்துராமலிங்கத் தேவர் அவர்களின் 119 வது பிறந்தநாள் விழா மற்றும் 64 வது குருபூஜை விழாவில், மாண்புமிகு எரிசக்தி மற்றும் சட்டத்துறை அமைச்சர் திரு.சி.டி.ஆர்.நிர்மல் குமார் அவர்கள், மாண்புமிகு குறு, சிறு மற்றும் நடுத்தரத் தொழில் நிறுவனங்கள் துறை அமைச்சர் திரு.பெ.மதன் ராஜா அவர்கள், மாண்புமிகு சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை அமைச்சர் மரு.வே.க.ராஜீவ் அவர்கள், மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.மா.சிவகுரு பிரபாகரன்,இ.ஆ.ப., அவர்கள் ஆகியோர் பசும்பொன் முத்துராமலிங்கத்தேவர் திருவுருவப்படத்திற்கு மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள்.

சட்டமன்ற உறுப்பினர்கள்திருதங்கபாண்டி (மதுரைமேற்கு) , திரு கோபிசன்(மதுரை தெற்கு) திரு கருப்பையா(சோழவந்தான்) திருமதி.குழந்தை ராணி நாச்சியார்(சிவகங்கை) திரு இளங்கோ (மானாமதுரை) கலந்து கொண்டனர்.

பள்ளி மாணவர்களிடையே பக்கவாத விழிப்புணர்வு முகாமை நடத்திய சென்னை அப்போலோ மருத்துவமனை



சென்னை, அக்31, சென்னை பவன்ஸ் ராஜாஜி வித்யாஷ்ரமம் பள்ளி மாணவர்கள், பக்கவாத பாதிப்பின் அறிகுறிகளை அறிந்து கொள்வதன் அவசியத்தையும், அதற்கான உடனடி மருத்துவச் சிகிச்சையை எவ்வாறு பெறவேண்டும் என்பதன் முக்கியத்துவத்தையும் வலியுறுத்தும் வகையில், சென்னை அப்போலோ மருத்துவமனை மற்றும் அப்பல்லோ ஷைன் பௌண்டேஷன் ஏற்பாடு செய்திருந்த பக்கவாத விழிப்புணர்வு நிகழ்ச்சியில் 'ஃபாஸ்ட்' (FAST) என்ற எழுத்துக்களை மனிதச் சங்கிலி வடிவில் மாணவர்கள் உருவாக்கினர். இந்நிகழ்ச்சியில், தமிழ்நாடு பள்ளிக் கல்வித் துறை அமைச்சர் ராஜ்மோகன் சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டார். மேலும், பவன்ஸ் ராஜாஜி வித்யாஷ்ரம் முதல்வர் ஸ்ரீ பி.ஜி. சுப்பிரமணியம், சென்னை மண்டல அப்போலோ மருத்துவமனைகளின் சி.இ.ஓ டாக்டர் இளங்குமரன் கலியமூர்த்தி ஆகியோர் இந்நிகழ்வில் கலந்து கொண்டார். மேலும் இந்நிகழ்வு குறித்து டாக்டர் இளங்குமரன் கலியமூர்த்தி கூறுகையில், "சுகாதார விழிப்புணர்வு மருத்துவமனைகளுடன் மட்டும் நின்றுவிடாமல், வீடுகள், பள்ளிகள், கல்லூரிகள் மற்றும் பணியிடங்களிலும் பரவ வேண்டும். இதுபோன்ற விழிப்புணர்வு முயற்சிகள், பள்ளிகள் மூலம் இளைஞர்களிடம் விழிப்புணர்வை ஏற்படுத்துவதற்கான ஒரு வாய்ப்பாக அமைகின்றன. மாணவர்கள் அறிந்த தகவல்களை தங்கள் குடும்பத்தினருடனும் பகிர்ந்துகொள்ள முடியும். ஸ்ட்ரோக் என்பது ஒரு மருத்துவ அவசர நிலை. அதன் அறிகுறிகளை அடையாளம் கண்டு, தாமதமின்றி செயல்படுவது மிகவும் முக்கியம் என்றார். சென்னை கிரீம்ஸ் ரோடு அப்போலோ மருத்துவமனையின் மூத்த நரம்பியல் அறுவைசிகிச்சை நிபுணர் டாக்டர் சீனிவாசன் பரமசிவம் கூறுகையில், 'பக்கவாத அறிகுறிகள் பெரும்பாலும் திடீரென தோன்றும். ஒரு பக்கம் முகம் கோணுதல், ஒரு கையில் ஏற்படும் பலவீனம் அல்லது பேசுவதில் சிரமம் ஆகியவை இதில் அடங்கும். திடீரென உடல் சமநிலையை இழப்பது அல்லது பார்வைக் குறைபாடு ஏற்படுவதும்கூட ஒருஎச்சரிக்கை அறிகுறியாக இருக்கலாம். அறிகுறிகள் தொடங்கிய நேரத்தை குறித்து வைத்துக்கொள்வது, நோயாளியைப் பரிசோதித்துச் சிகிச்சை அளிக்க மருத்துவர்களுக்கு பெரிதும் உதவும். முறையான மருத்துவப் பரிசோதனைகள் மற்றும் மருத்துவப் பிரச்சனைகளை கட்டுப்பாட்டில் வைத்திருப்பது பக்கவாதம் ஏற்படும் இடர்வாய்ப்பைக்குறைப்பதற்கான முக்கியப் படிகளாகும்." என்று தெரிவித்தார்.

காந்திகிராம கிராமிய நிறுவன பொன்விழா: குடியரசுத் துணைத் தலைவர் பங்கேற்று மாணவர்களுக்குப் பட்டங்கள் வழங்கினார்



திண்டுக்கல்: காந்திகிராம கிராமிய நிறுவனத்தின் பொன்விழா மற்றும் 39ஆவது பட்டமளிப்பு விழாவில் குடியரசுத் துணைத் தலைவர்சி.பி. ராதாகிருஷ்ணன் பங்கேற்று, சிறப்பாகக் கல்வி பயின்ற மாணவர்களுக்குத் தங்கப் பதக்கங்களையும், பட்டம் பெற்ற மாணவ, மாணவியர்களுக்குப் பட்டங்களையும் வழங்கினார்.

விழாவில் தவத்திரு குன்றக்குடி பொன்னம் பல அடிகளார், இஸ்ரோ முன்னாள் மூத்த விஞ்ஞானி நம்பி நாராயணன், பேராசிரியர் சொ.சொ.மீ. சுந்தரம் ஆகிய மூவருக்கும் மதிப்புறு முனைவர் பட்டங்கள் வழங்கப்பட்டன. மேலும், புதிய கட்டடங்களைத் திறந்து வைத்து, பல்வேறு திட்டங்களுக்கு அடிக்கல் நாட்டினார். "Inclusivity of India's Ageing Population" என்ற நூலையும், பொன்விழா சிறப்பு நினைவு அஞ்சல் உறையையும் வெளியிட்டார்.


நிகழ்ச்சியில் பேசிய அவர், 2047ஆம் ஆண்டுக்குள் வளர்ச்சியடைந்த பாரதத்தை உருவாக்க கிராமப்புறங்களின் முழுமையான வளர்ச்சி அவசியம் என்றார். செயற்கை நுண்ணறிவு, தானியங்கி தொழில்நுட்பம், டிஜிட்டல் மாற்றங்களை எதிர்கொள்ள மாணவர்கள் புதிய திறன்களைக் கற்றுக்கொள்ள வேண்டும் என்றும், போதைப்பொருள் பழக்கத்திலிருந்து விலகியிருக்க வேண்டும் என்றும் அறிவுறுத்தினார்.

தமிழக ஆளுநர் ராஜேந்திர விஸ்வநாத் அர்லேகர், பல்கலைக்கழக நிர்வாகிகள், பேராசிரியர்கள், மாணவர்கள், பெற்றோர்கள் உள்ளிட்டோர் விழாவில் பங்கேற்றனர்

காரைக்குடியில் உள்ள தேவர் சிலைக்கு மாலை அணிவித்து மரியாதை செலுத்திய நாம் வல்லம்பர் இயக்கம்



சிவகங்கை அக்டோபர் .31 பசும்பொன் முத்துராமலிங்கத் தேவர் ஜெயந்தி மற்றும் குருபூஜை விழாதமிழகம் முழுவதும் நேற்று அனுசரிக்கப்பட்டு வந்த நிலையில், காரைக்குடியில் அமைந்துள்ள தேவர் சிலைக்கு நாம் வல்லம்பர் இயக்கத்தின் தலைவர் ராம்குமார் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது, மரியாதை செலுத்தப்பட்ட பின் பசும்பொன் சித்தர் சேனை அமைப்பின் தலைவர் வழக்கறிஞர் குமார் தலைமையில் வரவேற்பு மரியாதை செய்யப்பட்டது, இதில் இயக்கத்தின் நிர்வாகிகள் உட்பட 50க்கும் மேற்பட்டோர் கலந்து கொண்டனர்.



கோவை மாவட்டம் பொள்ளாச்சி நகராட்சியின் புதிய ஆணையாளராக பொறுப்பேற்றிருக்கும் வீரமுத்துக்குமார் அவர்களை பொள்ளாச்சி அரசு நியமன நகர மன்ற உறுப்பினர் பொள்ளாச்சி முருகானந்தம் மரியாதை நிமித்தம் சந்தித்து பொன்னாடை, புத்தகம் அளித்து வாழ்த்து தெரிவித்தார். அப்போது பொள்ளாச்சி நகரின் பல்வேறு வார்டு பணிகள் குறித்து கலந்துரையாடினர்.



ஊத்தங்கரை கூட்டுறவு விற்பனை நிலையத்தில் ரூ.200 க்கு 10 பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை தொகுப்பு

எம் எல்.ஏ டாக்டர் இளையராஜா துவக்கி வைத்தார்

கிருஷ்ணகிரி:ஆக :31 கிருஷ்ணகிரி மாவட்டம் ஊத்தங்கரை கூட்டுறவு விற்பனை நிலையத்தில் ரூபாய் 200 க்கு 10 பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை தொகுப்பு வழங்கும் நிகழ்ச்சியில் கலந்து கொண்ட ஊத்தங்கரை சட்டமன்ற உறுப்பினர் டாக்டர் இளையராஜா குத்து விளக்கு ஏற்றி வைத்து, சிறப்பு மளிகை தொகுப்புகளான கடலை பருப்பு 250 கிராம், பாசிப்பருப்பு 250 கிராம், புலி 250 கிராம், தனியா 150 கிராம், பூண்டு 150 கிராம், மிளகாய் 100 கிராம், கடுகு 100 கிராம், உடைத்த உளுத்தம் பருப்பு 100 கிராம், சீரகம் 50 கிராம், சோம்பு 50 கிராம் என பத்து மளிகை பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை தொகுப்புகளை 200 ரூபாய்க்கு பொதுமக்களுக்கு வழங்கி முதல் விற்பனையை தொடங்கி வைத்தார். மாவட்டத் துணைப் பதிவாளர் சுவேதா, டி.டி 9 மேலாண்மை இயக்குனர் ஸ்ரீ அருண், 1056 கூட்டுறவு சங்க மேலாண்மை இயக்குனர் அருண்குமார், பொது மேலாளர் கோவிந்தராஜ் உள்ளிட்ட தமிழக வெற்றிக்கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர்.

குன்னூரில் மீண்டும் தொடங்கிய அரசு பேருந்து சேவை

மகிழ்ச்சியுடன் பயணித்த பொதுமக்கள்



நீலகிரி மாவட்டம், குன்னூர் பகுதியில் மீண்டும் அரசு பேருந்து சேவை தொடங்கியது. இதனால் பள்ளிக்குச் செல்லும் மாணவ, மாணவியர்கள் மற்றும் அன்றாடம் வேலைக்குச் செல்லும் பொதுமக்கள் மிகுந்த மகிழ்ச்சி அடைந்தனர்.அரசுப் பேருந்து சேவை தொடங்கியதைத் தொடர்ந்து பள்ளிக் குழந்தைகளும் பொதுமக்களும் ஆர்வத்துடன் பேருந்தில் ஏறிப் பயணம் மேற்கொண்டனர். நீண்ட நாட்களாக எதிர்பார்த்த பேருந்து சேவை மீண்டும் தொடங்கியதால் அப்பகுதி மக்கள் மகிழ்ச்சி தெரிவித்தனர்.



ராணிப்பேட்டை மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.ந.ப்ரியா ரவிச்சந்திரன், மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் மாற்றுத்திறனாளிகள் நலத் துறை சார்பில் நடைபெற்ற மாற்றுத்திறனாளிகள் மற்றும் மாற்றுத்திறனாளி சங்க பிரதிநிதிகளுக்கான சிறப்பு குறைதீர்வு கூட்ட முகாமில் முதலமைச்சரின் விரிவான மருத்துவ காப்பீடு திட்டத்தின் கீழ் 7 மாற்றுத்திறனாளிகளுக்கு ரூ.2.33 இலட்சம் மதிப்பீட்டிலான செயற்கை அவயங்கள் வழங்கினார்.

தின தமிழ்
நிருபர்கள் தேவை
"வெற்றிகரமாக தொடர்ந்து 4 ஆண்டுகளாக"
தமிழகம் முழுவதும் பிரிண்ட் ஆகி வெளிவந்து கொண்டிருக்கும் தினதமிழ் நாளிதழுக்கு மாவட்ட வாரியாக நிருபர்கள் மற்றும் போட்டோகிராபர்கள் தேவை
தகுதிகள்
குற்ற வழக்குகள் இருக்கக் கூடாது, முன் அனுபவம், பட்டதாரி, தமிழில் உரையாடுதல், தமிழில் பிழையின்றி எழுதுதல், தகவல் பரிமாற்றத் திறன்.
மேற்கண்ட தகுதிகள் பெற்றிருப்பவர்கள் கீழ்க்கண்ட எண்ணிற்கு தொடர்பு கொள்ளலாம்
99944 66200, 70102 64701

குமரியில் அரசு சார்பில் இலவச கண் லென்ஸ் பொருத்தும் முகாம்;கலெக்டர் தகவல்

நாகர்கோவில், அக்.31 கண் நோய்களால் பாதிக்கப்படுவோர்களுக்கு சிகிச்சை முறைகள் மிக வேகமாக முன்னேற்றமடைந்து கொண்டிருக்கிறது. முந்தைய காலங்களில் கையாண்ட கண்புரை அறுவை சிகிச்சை முறைகள் தற்போது செய்யப்படுவதில்லை. அதற்கு பதிலாக அதிநவீன முறையிலான மேம்படுத்தப்பட்ட "கண் லென்ஸ்" பொருத்தும் சிகிச்சை நோயாளர்களுக்கு தற்போது செய்யப்பட்டு வருகிறது .

குமரி மாவட்டத்தில் இந்த "கண் லென்ஸ்" பொருத்தும்கிசிட்சையின் முக்கியத்துவத்தை மக்கள் அறிந்து கொள்ளவும் அதன் முழு பயனையும் கண்புரை நோயாளர்கள் பெறுவதற்காக அரசு சார்பில் ஒவ்வொரு ஊராட்சிகளிலும் கீழ்கண்ட தேதிகளில் "கண் லென்ஸ் பொருத்தும் முகாம்" நடைபெற உள்ளது.

தோவாளை ஊராட்சி ஒன்றியத்தில் 02.11.2026 செண்பகராமன்புதூர் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், அகஸ்தீஸ்வரம் ஊராட்சி ஒன்றியத்தில் 03.11.2026 அன்று அகஸ்தீஸ்வரம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 04.11.2026 அன்று குளச்சல் அரசு மருத்துவமனையிலும், 06.11.2026 அன்று கருங்கல் அரசு மருத்துவமனையிலும், 10.11.2026 அன்று இடைக்கோடு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 11.11.2026 அன்று பூதப்பாண்டி அரசு மருத்துவமனையிலும், 17.11.2026 அன்று முட்டம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், முஞ்சிறை ஊராட்சி ஒன்றியம் 18.11.2026 அன்று முஞ்சிறை ஊராட்சி ஒன்றியத்துக்குட்பட்ட ஆறுதேசம் அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 24.11.2026 அன்று இராஜாக்கமங்கலம் துறை அரசு ஆரம்ப சுகாதார நிலையத்திலும், 25.11.2026 அன்று அரசு மருத்துவமனை குழித்துறையிலும், 27.11.2026 அன்று குலசேகரம் அரசு மருத்துவமனையிலும் முகாம்கள் நடைபெற உள்ளது.

இந்த முகாம்களில் கலந்து கொள்ளும் அனைத்து கண்புரை நோயாளர்களையும் அரசு வாகனத்தில் அழைத்து வந்து இலவசமாக கண் லென்ஸ் பொருத்தும் சிகிச்சை மேற்கொள்ளப்படும். எனவே கண்புரை நோயாளர்கள் இவ்வறிய வாய்ப்பினை பயன்படுத்தி இந்த நவீன கண் லென்ஸ் பொருத்தும் சிகிச்சையை மேற்கொண்டு நமது கன்னியாகுமரி மாவட்டத்தில் கண் புரை நோயுற்றோர் அனைவரும் பார்வை அடைந்துள்ளனர் என்ற நிலையை ஏற்படுத்த வேண்டுமென மாவட்ட ஆட்சித்தலைவர் மு.பிரதாப் தெரிவித்துள்ளார்.

கோவையில் மூளை அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்து சாதனை



கோவை அக்:31 மேம்பட்ட Neurosurgical சிகிச்சையில் ஒரு முக்கிய மைல்கல்லாக,PSG மருத்துவமனை 2026 ஆம் ஆண்டில் நோயாளிகளுக்கு அவர்கள் விழிப்புடன் இருக்கும் நிலையில் (Awake Craniotomy கட்டிகளை அகற்றும் அறுவை சிகிச்சைகளை வெற்றிகரமாகச் செய்துள்ளது. இது குறித்து செய்தியாளர் சந்திப்பு ஏபிளாக் வளாகத்தில் நடைபெற்றது.

இரு நோயாளிகளுக்கும் Lowgrade Glioma எனப்படும்,பொதுவாக மெதுவாக வளரக்கூடிய மூளைக் கட்டிகள் இருப்பது கண்டறியப்பட்டது.இந்தக் கட்டிகள் மூளையின் இடது பக்க பகுதியில் அமைந்திருந்தன.இந்தப் பகுதி பேச்சு,மொழித்திறன் மற்றும் உடல் இயக்கங்களைக் கட்டுப்படுத்தும். இத்தகைய பகுதிகளில் அறுவை சிகிச்சை மேற்கொள்ளும் போது மிகுந்த கவனம் தேவை.ஏனெனில்,இந்தப் பகுதிகளில் ஏற்படும் பாதிப்புகள் ஒருவரின் பேசும் திறன்,மொழியைப் புரிந்துகொள்ளும் திறன் மற்றும் இயல்பாக உடலை அசைக்கும் திறனைப் பாதிக்கக்கூடும்.

Awake Brain Surgery மேற்கொள்ளும்போது, நோயாளியின் வலியைக் கட்டுப்படுத்துவதுடன், உடலின் முக்கியமான உடலியல் செயல்பாடுகளையும் நிலையாகப் பராமரிப்பது மிகவும் அவசியமாகும். அதே நேரத்தில், நோயாளியின் நரம்பியல் செயல்பாடுகளைத் துல்லியமாக மதிப்பீடு செய்யக்கூடிய சூழலையும் உறுதிப்படுத்த வேண்டும்.

இந்த அனைத்து அம்சங்களையும் மருத்துவக் குழுவினர் சிறப்பாகக் கையாண்டதால், இரு நோயாளிகளும் அறுவை சிகிச்சையின்போது வசதியாகவும்,மருத்துவர்களின் வழிகாட்டுதல்களுக்கு ஒத்துழைக்கும் நிலையிலும் இருந்தனர்.இரு அறுவை சிகிச்சைகளும் எந்தவிதமான சிக்கல்களும் இன்றி வெற்றிகரமாக நிறைவு செய்யப்பட்டன.

Neurosurgery மருத்துவக் குழுவில் இடம்பெற்றிருந்த Dr கே எஸ் திருமூர்த்தி, Dr.ஜெயபிரகாஷ் துரைசாமி,Dr.வினோத் டி.மற்றும் Dr.வர்ஷா பி.ஆகியோர், Consultant Neuroanaesthesiologist Dr அரவிந்த்ஜயப்பன் அவர்களின் ஒத்துழைப்புடன் மேற்கொண்டனர்.

இந்த 2 அறுவை சிகிச்சைகளும்,சிக்கலான மூளைக் கட்டிகளுக்கான மேம்பட்ட சிகிச்சையை வழங்குவதில் PSG மருத்துவமனையின் நரம்பியல் அறுவை சிகிச்சை மற்றும் நியூரோ அனஸ்தீசியா குழுவினரின் நிபுணத்துவத்தையும் ஒருங்கிணைந்த பணியையும் எடுத்துக்காட்டுகின்றன என்று தெரிவித்தனர்.



குன்னூர்–மேட்டுப்பாளையம் சாலையில் விழுந்த ராட்சத வேங்கை மரங்கள் அகற்றம்! நீலகிரிமாவட்டஆட்சித்தலைவரின்அறிவுறுத்தலின்படி,குன்னூர்–மேட்டுப்பாளையம்சாலையில் உள்ள புதுக்காடு கிராமத்தில் நடைபாதையில் விழுந்த ராட்சத வேங்கை மரங்களை அகற்றும் பணி தீவிரமாக நடைபெற்று வருகிறது.

பொதுமக்கள் நடைபாதையைப் பாதுகாப்பாகப் பயன்படுத்தும் வகையில், கிரேன் வாகனத்தின் உதவியுடன் மரங்களை அகற்றும் பணியில் பணியாளர்கள் ஈடுபட்டு வருகின்றனர். இதனால் அப்பகுதி பொதுமக்கள் நிம்மதி அடைந்துள்ளனர்.



திண்டுக்கல் மாவட்டம், கூட்டுறவு, உணவு நுகர்வோர் பாதுகாப்புத் துறையின் சார்பில் ஊரகப் பகுதிகளில் கூட்டுறவு அங்காடிகள் மூலம் ரூ.200க்கு விற்பனை செய்யப்படும், 10 மளிகை பொருட்கள் அடங்கிய சிறப்பு மளிகை தொகுப்புகள் வழங்கும் நிகழ்வினை, ஆத்தூர் வட்டம், காந்திகிராமம் பகுதியில் செயல்பட்டு வரும் டிடி 85 காந்திகிராமம் கூட்டுறவு பண்டகசாலையில், மாவட்ட ஆட்சித்தலைவர் துர்காமூர்த்தி, இ.ஆ.ப., தொடங்கி வைத்தார்.

உடன் கூட்டுறவு சங்கங்களின் மண்டல இணைப்பதிவாளர் ஸ்ரீ ராகவ் பாலாஜி, துணை பதிவாளர் (பொது விநியோக திட்டம்) கார்த்திகேயன், துணைப் பதிவாளர் / செயலாட்சியர் கனகராஜ் உட்பட பலர் உள்ளனர்.

DHINA TAMIL DAILY : Published and Printed By Rajasingh, Published from 16C,246 Cross, Professor Joseph Street, Simon Nagar, Nagercoil - 629001.
Printing at Sree Murugan Printers, 209/A, Vaithyanathapuram, Kottar Post, Nagercoil - 629002. Ph : 99944 66200. Editor : Rajasingh. All Claims are subject to the Nagercoil Jurisdiction.